දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2784825

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail: isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................

අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி அமைச்சு

Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල

'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ED/01/14/02/03

දිනය / திகதி / Date 2012.11. 30

சுற்றறிக்கை இல.: 40/2012

மாகாணக் கல்விச் செயலாளர்,

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

வலயக் கல்விப் பணிப்பாளர்,

அதிபர்.

## அரச பாடசாலைகளுக்காக விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்தலும், விநியோகித்தலும்

அரச பாடசாலைகளுக்காக விஞ்ஞான உபகரணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக கல்வி உயர்கல்வி மற்றும் கலாச்சார விவகாரச் செயலாளரினால் 1993/10/15 ஆம் திகதி வெளியிடப்பட்ட இல. 1993/21 கொண்ட சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், இதன் பின்னர் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவும் இத்தால் ஆலோசனைகளை வழங்குகிறேன்.

1) அரச பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பிப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச விஞ்ஞான உபகரணங்களின் பட்டியல் மற்றும் அவ்வுபகரணங்களுக்காகச் செல்லுபடியாகும் மதிப்பீட்டு ஆவணம் ஆகியன இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2) இவ்வாவணத்தின் இணைப்பு I கொண்ட பட்டியலுக்குரிய விஞ்ஞான உபகரணங்களை கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் பாடசாலை மூலம் உரிய நிதிக் கோவைகளுக்கு இணங்கக் கொள்வனவு செய்யதுகொள்ள முடியும்.

3) இணைப்பு I இல் 6 - 11 ஆம் தரங்களுக்காக குறிப்பிடப்பட்டுள்ள வகைகளின் எண்ணிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது 6 - 11 தரங்களின் 500 மாணவர்கள் அல்லது அதனை விடக் குறைந்த எண்ணிக்கைக்காகும். அதனை விட அதிகரிக்கும் சகல 500 குழுக்களுக்காகவும் மேலதிக தொகுதிகள் மூலம் கொள்வனவு செய்தல் முடியும்.

4) இணைப்பு 1 இல் க.பொ.த. (உ.த.) இற்காக குறிப்பிடப்பட்டிருப்பது உரிய பாடத்தினைக் கற்கும் 80 மாணவர்கள் அல்லது அதனை விடக் குறைந்த ஒரு தொகுதிக்காகும். அதிகரிக்கும் 80 மாணவர்களுக்கு மேலதிகமான தொகுதிகளுக்காகவும் கொள்வனவு செய்ய முடியும்.

5) இணைப்பு இல. 4.000 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களை பாடசாலை மட்டத்தில் மாத்திரம் கொள்வனவு செய்ய வேண்டும். இதற்காக பண்புசார் உள்ளீட்டு நிதியினைப் பயன்படுத்த முடியும்.

6) நிரந்தர உபகணரங்கள் சகலதும் பொது 44 பொருட்பட்டியல் புத்தகத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் இரசாயனப் பொருள் மற்றும் நச்சுப் பொருட்கள் பொது 198 புத்தகத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.

7) ஆவணத்தில் குறிப்பிடப்படாத ஏதாவது விஞ்ஞான உபகரணத்தினைக் கொள்வனவு செய்ய தேவையான பட்சத்தில் அவ்வுபகரணத்தின் மதிப்பீடு மற்றும் அதன் தேவை தொடர்பில் கல்வி அமைச்சின் விஞ்ஞானப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இக்கோரிக்கை விஞ்ஞானப் பாட இணைப்புக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவையான அங்கீகாரம் வழங்கப்படும்.

8) எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் பாடவிதான மறுசீரமைப்பிற்கு அமைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிரந்தர உபகரணம், இரசாயனப் பொருள், மற்றும் நச்சுப் பொருட்களில் மாற்றங்கள் ஏற்படும் என்பதனால் 05 வருடங்களுக்கு ஒரு தடவை இவ்வாவணத்தினை மறுசீரமைத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளை நீக்க அல்லது ஆவணத்தில் உள்ளடக்க கல்வி அமைச்சு மற்றும் தேவையான கல்வி நிர்வாகத்தின் பங்கேற்புடன் விஞ்ஞானச் செயற்பாட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகளுக்கு அமைய மேற்கொள்ள வேண்டும்.



எஸ்.எம். கோடாபய ஜயரட்ண,
கல்விச் செயலாளர்.